**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**C.C. No. 113 /2020 PW1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செந்தில் | தந்தை/கணவர் பெயர்: ஆறுமுகம் | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2026

---

**(2,3 எதிரிகள் ஆஜர். 1,4, 5 எதிரிகள் ஆஜரில்லை. 1,4, 5 எதிரிகள்சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

<u>21.01.2026 முதல் விசாரணை:</u>

1. நான் ஆலம்பட்டி கிராமத்தில் குடியிருக்கிறேன். நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். எதிரிகள் எனக்கு பங்காளி முறை உறவினர்கள் ஆவார். கொரோனா தொற்று ஏற்பட்ட காலத்தில் 2020ம் ஆண்டு கோயம்முத்தூரிலிருந்து நான் ஊருக்கு வந்திருந்தேன். 05.09.2020ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு என் மனைவியின் அத்தை ஞானசௌந்தரி என்பவரின் இடத்தில் கட்டுமான வேலை செய்து கொண்டிருந்தோம். அப்போது எதிரிகள் அனைவரும் அந்த இடத்திற்கு வந்து தேவுடியா பயல்களை என்று கெட்டவார்த்தை பேசி 2ம் எதிரி என்னை கம்பியின் மேல் தள்ளிவிட்டார்.

2. 1ம் எதிரி அங்கியிலிருந்து என் மனைவியை கம்பியால் அடித்தார். நான் உடனே சென்று தடுத்தேன். அப்போது கம்பி வலது கையில் பட்டு எனக்கு இரத்த காயம் ஏற்பட்டது. மேலும் எதிரிகள் அனைவரும் சேர்ந்து என்னை கீழே தள்ளிவிட்டு என்னை காலால் மிதித்தார். எனக்கு வலது கண்ணிற்கு மேல்பகுதியிலும், வலது முழங்காலிலும், கணுக்காலிலும் காயம் ஏற்பட்டது. நான் போகும் போது தொடர்ந்து வேலை பார்த்தால் கொன்றுவிடுவோம் என எதிரிகள் என்னை மிரட்டினார்கள். பின்னர் என் மனைவி என்னை சிங்கம்புணரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து வந்தார்.

3.மருந்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் போலீசாரிடம் கொடுத்த புகார் வாக்குமூலம் ஆகும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். (அந்த புகார் வாக்குமூலம் **அ.த.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

4.எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடித்துவைக்கப்படுகிறது.